Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

***

# nan2n2Ul
## of pavaNanti mun2ivar

# நன்னூல்
## பவணந்தி முனிவர்

***

Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Etext preparation : Selvi. Selvanayagi L.
Proof-reading: Tmt. N.D. Rani & Tiru. N.D. LogaSundaram, Chennai, Tamilnadu, India.
Etext prep in pdf format: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland
This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.

© Project Madurai 2002
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# நன்னூல்

## பவணந்தி முனிவர்

திருச்சிற்றம்பலம்

## சிறப்புப்பாயிரம்

மலர்தலை உலகின் மல்கிருள் அகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொருதா னாகி முதலீறு
ஒப்பளவு ஆசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்
மனஇருள் இரிய மாண்பொருள் முழுவதும்
முனிவற அருளிய மூஅறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
அரும்பொரு ளைந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறும் நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே

**********

திருச்சிற்றம்பலம்

## 1. பொதுப்பாயிரம்

### பாயிரத்தின் பெயர்கள்

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் 1

### பாயிர வகை

பாயிரம் பொதுச்சிறப் பெனஇரு பாற்றே 2

## பொதுப்பாயிரம் இன்னதென்பது

நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம் 3

## 1. நூலினது வரலாறு

## நூல் இன்னதென்பது

நூலின் இயல்பே நுவலின் ஓரிரு
பாயிரந் தோற்றி மும்மையின் ஒன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமும் அகற்றியம் மாட்சியோடு
எண்ணான் குத்தியின் ஒத்துப் படலம்
என்னும் உறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே 4
மூவகை நூல்

முதல்வழி சார்பென நூல்மூன் றாகும் 5

## முதனூல் இன்னதென்பது

அவற்றுள்
வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும் 6

## வழிநூல் இன்னதென்பது

முன்னோர் நூலின் முடிபுஒருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும் 7

## சார்புநூல் இன்னதென்பது

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும் 8

## வழிநூலுக்குஞ் சார்புநூலுக்கும் எய்தியதன்மேற் சிறப்புவிதி

முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கும் - முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோளி லென்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள் 9

## நாற்பொருட் பயன்

அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே 10

## எழுமதம்

எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் தன்மதங் கொளலே 11

## பத்துக் குற்றம்

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்றம் நூற்கே 12

## பத்தழகு

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகம்மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்தது
ஆகுதல் நூலிற் கழகெனும் பத்தே 13

## முப்பத்திரண்டு உத்தி

நுதலின் புகுதல் ஓத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியி னெய்த வைத்தல்
இன்ன தல்ல திதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லி னெய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்க மிகஎடுத் துரைத்தல்
சொல்லின் முடிவி னப்பொருள் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென உத்தியெண் ணான்கே 14

## உத்தி இன்னதென்பது

நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர உத்தி 15

## ஓத்து இன்னதென்பது

நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை யொருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர் 16

## படலம் இன்னதென்பது

ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரின் அதுபடல மாகும் 17

## சூத்திரம் இன்னதென்பது

சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செல்வன் ஆடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம் 18

## சூத்திர நிலை

ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை 19

## சூத்திரங்களுக்குக் காரண வகையால் வரும் பெயர் வேறுபாடு

பிண்டந் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம் 20

## உரையினது பொது இலக்கணம்

பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவுஅதி காரந் துணிவு பயனோடு
ஆசிரிய வசனமென் றீரே முரையே 21

## காண்டிகையுரை இன்னதென்பது

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை 22

### விருத்தியுரை இன்னதென்பது

சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி 23

### நூலென்னும் பெயர்க் காரணம்

பஞ்சிதன் செல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு 24
உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா - மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு 25

## 2 ஆசிரியனது வரலாறு

### நல்லாசிரியர் இலக்கணம்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலைமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே 26
தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவம் முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே 27
அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே 28
ஐயந் தீரப் பொருளைப் யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே 29
மங்கல மாகி யின்றி யமையாது
யாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே 30

### ஆசிரியராகாதார் இலக்கணம்

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்கா றவாவஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலரா சிரியரா குதலே 31
பெய்தமுறை யன்றிப் பிறழ உடன்றரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே 32

தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை 33
அரிதிற் பெயக்கொண் டப்பொருள் தான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை 34
பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கும் அதுமுடத் தெங்கே 35

## 3 பாடஞ்சொலல்லின் வரலாறு

ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்துஅவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப 36

## 4 மாணாக்கனது வரலாறு

### மாணாக்கர் இலக்கணம்

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே 37

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர் 38

### மாணாக்கராகாதார் இலக்கணம்

களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறன்இன் னோர்க்குப் பகரார் நூலே 39

## 5 பாடங்கேட்டலின் வரலாறு

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்னஆர் வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவிவா யாக வெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர் 40
நூல்பயில் இயல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்

ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி யிகக்கும் 41
ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே 42
முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும் 43
ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும் 44
அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும் 45
அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு
எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே 46

## 6. சிறப்புப் பாயிரத்திலக்கணம்

### சிறப்புப் பாயிரத்துக்குப் பொதுவிதி

ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே 47
காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே 48

### நூற்பெயருக்குச் சிறப்புவிதி

முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானும்நூற் கெய்தும் பெயரே 49

### வழியின்வகையாகிய நூல்யாப்புக்குச் சிறப்புவிதி

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு
எனத்தகும் நூல்யாப் பீரிரண் டென்ப 50

### சிறப்புப்பாயிரஞ் செய்தற்குரியார் இவரென்பது

தன்னா சிரியன் தன்னொடு கற்றேன்
தன்மா ணாக்கன் தகுமுரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே 51

### சிறப்புப்பாயிரம் பிறர் செய்ததற்குக் காரணம்

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே 52

### தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள்

மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரா ரிடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலுந் தகும்புல வேற்கே 53

### பாயிரம் நூலுக்கு இன்றியமையாச் சிறப்பின தென்பது

ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே 54
மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது 55

*************

# 2. எழுத்ததிகாரம்

## 1 எழுத்தியல்

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவன் எழுத்தே 56

### எழுத்திலக்கணத்தின் பகுதி

எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை
முதலீறு இடைநிலை போலி யென்றா
பதம்புணர்ப்பு எனப்பன் னிருபாற் றதுவே 57

### 1. எண்

### எழுத்து இன்னதென்பதும் அதன்வகையும்

மொழிமுதற் காரணம் ஆம்அணுத் திரளொலி
எழுத்துஅது முதல்சார் பெனஇரு வகைத்தே 58

### முதலெழுத்தின் விரி

உயிரும் உடம்புமாம் முப்பது முதலே 59

### சார்பெழுத்தின் வகை

உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்

தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும் 60

### சார்பெழுத்தின் விரி

உயிர்மெய் இரட்டுநூற் றெட்டுஉய ராய்தம்
எட்டுஉயி ரளபுஎழு மூன்றுஒற் றளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்
உகரம் ஆறாறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப 61

## 2. பெயர்

### பெயர்க்கெல்லாம் பொது இலக்கணம்

இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின 62

### எழுத்தின் பெயர்

அம்முதல் ஈறாறு ஆவி கம்முதல்
மெய்ம்மூ ஆறென விளம்பினர் புலவர் 63
அவற்றுள்
அ இ உ எ ஒக்குறில் ஐந்தே 64
ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் 65
அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே 66
எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ யிரு வழியும் வினாஆ கும்மே 67
வல்லினம் க ச ட த ப ற வெனவாறே 68
மெல்லினம் ங ஞ ண ந ம ன வெனவாறே 69
இடையினம் ய ர ல வ ழ ள வெனவாறே 70

### இன எழுத்து

ஐஔஇ உச் செறிய முதலெழுத்து
இவ்விரண் டோரின மாய்வரல் முறையே 71

### இனம் என்பதற்குக் காரணம்

தானம் முயற்சி அளவு பொருள்வடிவு
ஆனஒன் றாதியோர் புடையொப் பினமே 72

## 3. முறை

சிறப்பினும் இனத்தினுஞ் செறிந்தீண் டம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே 73

## 4 பிறப்பு

## பிறப்பின் பொதுவிதி

நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும்அணுத் திரளுரங் கண்டம் உச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே 74

## முதலெழுத்துக்களுக்கு இடப்பிறப்பு

அவ்வழி
ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை 75

## முதலெழுத்துக்களுக்கு முயற்சிப் பிறப்பு

அவற்றுள்
முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய 76
இ ஈ எ ஏ ஐ அங் காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே 77
உ ஊ ஒ ஓ ஒள இதழ் குவிவே 78
கஙவுஞ் சஞவும் டணவு முதலிடை
நுனிநா அண்ண முறமுறை வருமே 79
அண்பல் லடிநா முடியுறத் தநவரும் 80
மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும் 81
அடிநா வடியண முறயத் தோன்றும் 82
அண்ணம் நுனிநா வருட ரழவரும் 83
அண்பல் முதலும் அண்ணமு முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும் 84
மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே 85
அண்ண நுனிநா நனியுறிற் றனவரும் 86

## சார்பெழுத்துக்கு இடமுயற்சி

ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய 87

## பிறப்புக்குப் புறனடை

எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபுந் தத்தமிற் சிறதுள வாகும் 88

## உயிர்மெய்

புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை உயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய் 89

### முற்றாய்தம்

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே 90

### உயிரளபெடை

இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே 91

### ஒற்றளபெடை

ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே 92

### குற்றியலிகரம்

யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமுங் குறிய 93

### குற்றியலுகரம்

நெடிலொடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே 94

### ஐகார ஔகாரக் குறுக்கங்கள்

தற்சுட்டு அளபொழி ஐம்மு வழியும்
நையும் ஔவும் முதலற் றாகும் 95

### மகரக் குறுக்கும்

ண ன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும் 96

### ஆய்தக் குறுக்கம்

ல ள வீற் றியைபினாம் ஆய்தம் அஃகும் 97

## 5. உருவம்

தொல்லை வடிவின எல்லா எழுத்தும்ஆண்டு
எய்தும் எகர ஒகரமெய் புள்ளி 98

## 6. மாத்திரை

### எழுத்துக்களின் மாத்திரை

மூன்றுஉயி ரளபுஇரண் டாம்நெடி லொன்றே
குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரைஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகா னாய்த மாத்திரை 99

### மாத்திரை இன்னதென்பது

இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை 100

### மாத்திரைக்குப் புறனடை

ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின் 101

## 7. முதனிலை

### மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய
ஞ ங ஈ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல் 102

### பொதுவிதியுட் சிறப்புவிதி

உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல் 103
அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல் 104
அ ஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல் 105
சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே 106

## 8. இறுதிநிலை

### மொழிக்கிறுதியில் வரும் எழுத்துக்கள்

ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயும் உகரம்நா லாறு மீறே 107

### சிலவற்றிற்குச் சிறப்புவிதி

குற்றுயி ரளபி னீறாம் எகரம்
மெய்யோடே லாதொந் நவ்வொ டாமௌக்
ககர வகரமோ டாகு மென்ப 108

### எழுத்தினது முதலும் ஈறும்

நின்றநெறி யேஉயிர் மெய்முத லீறே 109

## 9. இடைநிலை மயக்கம்

க ச த ப ஒழித்தஈ ரேழன் கூட்டம்

மெய்ம்மயக்கு உடனிலை ரழஒழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே 110

### வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி

ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே 111
ஞநமுன் தம்மினம் யகரமொ டாகும் 112
டறமுன் கசப மெய்யுடன் மயங்கும் 113
ணனமுன் னினங்கச ஞபமய வவ்வரும் 114
மம்முன் பயவ மயங்கு மென்ப 115
யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும் 116
லளமுன் கசப வயஒன் றும்மே 117

### உடனிலை மெய்மயக்கத்தின் சிறப்புவிதி

ரழஅல்லன தம்முன் தாம்உடன் நிலையும் 118
தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்குவன இவை

### மொழிக்கு உறுப்பாக மயங்காதன இவை

யரழவெற் றின்முன் கசதப ஙஞநம
ஈரொற் றாம்ரழத் தனிக்குறி லணையா 119

### செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
நைந்தீ ரொற்றாஞ் செய்யு ளுள்ளே 120
முதனிலை இறுதிநிலை

### இடைநிலைகளுக்குப் புறனடை

தம்பெயர் மொழியின் முதலு மயக்கமும்
இம்முறை மாறியும் இயலு மென்ப 121

## 10 போலி

### மொழியிறுதிப் போலி

மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோ டுறழா நடப்பன வுளவே 122

### மொழிமுதற் போலியும் மொழியிடைப் போலியும்

அ ஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன் 123

### மொழியிடைப் போலி

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி

ஞஃகா னுறழு மென்மரு முளரே 124

சந்தியக்கரம்

அம்முன் இகரம் யகர மென்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன 125

எழுத்தின் சாரியைகள்

மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்
ஐஔக் கானு மிருமைக் குறிலிவ்
இரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற 126

இவ்வியலுக்குப் புறனடை

மொழியாய்த் தொடரினு முன்னனைத் தெழுத்தே 127

## 2. பதவியல்

### 1 பதம்

பதம் இன்னதென்பதும் அதன் வகையும்

எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருள்தரிற்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி யியலு மென்ப 128

ஓரேழுத்தொரு மொழி

உயிர்மவி லாறும் தபநவி லைந்தும்
கவசவி னாலும் யவ்வி லொன்றும்
ஆகும் நெடில்நொது ஆங்குறி லிரண்டோடு
ஓரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின 129

தொடரெழுத்தொரு மொழி

பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்தீ றாகத் தொடரு மென்ப 130

பகாப்பதம்

பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம் 131

பகுபதம்

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே 132

### பகுபத உறுப்புக்கள்

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் 133

## 2. பகுதி

### பகுதி இன்னதென்பது

தத்தம்
பகாப்ப தங்களே பகுதி யாகும் 134

### பண்புப் பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே 135
ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே 136

### தெரிநிலைவினைப் பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்லவ் வாழ்கே ளஃகென்று
எய்திய இருபான் மூன்றா மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே 137

### ஏவற்பகுதிக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவ லிணையினீ ரேவல் 138

### வினைப்பகுதிக்குப் புறனடை

விளம்பிய பகுதிவே றாதலும் விதியே 139

## 3. விகுதி

அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொ டும்மூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்

ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே 140

## 4. இடைநிலை

### பெயரிடைநிலை

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே 141

### இறந்தகாலவினை இடைநிலை

தடறவொற் றின்னே யைம்பால் மூவிடத்து
இறந்த காலந் தருந்தொழி லிடைநிலை 142

### நிகழ்கால இடைநிலை

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை யிடைநிலை 143

### எதிர்கால இடைநிலை

பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழுது
இசைவினை யிடைநிலை யாமிவை சிலஇல 144

### காலங்காட்டும் விகுதி

றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவுந்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மமா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே 145

## 5. வடமொழியாக்கம்

### ஆரியமொழி தமிழில் வடமொழியாதல்

இடையில் நான்கு மீற்றி லிரண்டும்
அல்லா அச்சுஐ வருக்கமுத லீறி
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும் 146

### ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்புவிதி

அவற்றுள்
ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வு முப்பது சயவும்

மேலொன்று சடவு மிரண்டு சதவும்
முன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும் 147
ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே 148
இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமு நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற 149
தமிழெழுத்திற் சிறப்பெழுத்தும் பொது எழுத்தும்

றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரளபு
அல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே 150

# 3. உயிரீற்றுப் புணரியல்

## 1. புணர்ச்சி

### புணர்ச்சி இன்னதென்பது

மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே 151

### அல்வழி வேற்றுமை இவையென்பது

வேற்றுமை ஐம்முத லாறாம் அல்வழி
தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனஈ ரேழே 152

### இயல்பு புணர்ச்சி

விகார மனைத்தும் மேவல தியல்பே 153

### விகாரப் புணர்ச்சி

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும் 154

### செய்யுள் விகாரம்

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி 155
ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே 156
புணர்ச்சி விகாரத்தில் வருவதோரையம் ஓழித்தல்

ஓருபுணர்க் கிரண்டு மூன்றும் உறப்பெறும் 157

## 2. பொதுப்புணர்ச்சி

### எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்

எண்மூ எழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரும் ஞ ந ம ய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் ண ள ன ல வழிநத் திரியும் 158

### பொதுப்பெயர் உயர்திணைப் பெயரீறு

பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்
வலிவரி னியல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமாம் உயர்திணை 159

### வினாப்பெயர் விளிப்பெயர் முன் வல்லினம்

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே 160

### முன்னிலை வினை ஏவல்வினைமுன் வல்லினம்

ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே 161

## 3. உயிறீற்றுச் சிறப்புப் புணர்ச்சி

### உயிர்முன் உயிர் புணர்தல்

இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் 162

### வினாச்சுட்டின்முன் நாற்கணமும் புணர்தல்

எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையுந் தூக்கிச் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுதல் நெறியே 163
குற்றியலுகரமுன்னுஞ் சில முற்றியலுகர

முன்னும் உயிரும் உகரமும் புணர்தல்

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி 164

## 4. உயிரீற்றுமுன் வல்லினம்

## உயிரீற்றின்முன் வல்லினம் புணர்தல்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே 165
உயிரீற்றுச் சிலமரப்பெயர்முன்

## வல்லினம் புணர்தல்

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே 166

## அகர ஈற்றுச் சிறப்புவிதி

செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றாற னுருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் னியல்பே 167
வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்தஃ தேகினு மியல்பே 168
சாவஎன் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி 169
பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பு மிகலும் அகரம் ஏக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலு முளபிற 170

## ஆகார ஈற்றுச் சிறப்புவிதி

அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா 171
குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனொடு
உகர மேற்றலும் இயல்புமாந் தூக்கின் 172

## இகர ஈற்றுச் சிறப்புவிதி

அன்றி இன்றிஎன் வினையெஞ்சு இகரம்
தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே 173
உரிவரின் நாழியி னீற்றுயிர் மெய்கெட
மருவும் டகரம் உரியின் வழியே
உகரஉயிர் மெய்யாம் ஏற்பன வரினே 174
சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றும் 175

## இகர ஐகார ஈற்றுச் சிறப்புவிதி

அல்வழி இ ஐம் முன்ன ராயின்
இயல்பு மிகலும் விகற்பமு மாகும் 176

## ஈகார ஈற்றுச் சிறப்புவிதி

ஆமுன் பகரவீ அனைத்தும்வரக் குறுகும்
மேலன அல்வழி யியல்பா கும்மே 177
பவ்வீ நீமீ முன்னர் அல்வழி

இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே 178

## முற்றுகர ஈற்றுச் சிறப்புவிதி

மூன்றாறு உருபெண் வினைத்தொகை சுட்டீறு
ஆகும் உகர முன்ன ரியல்பாம் 179
அதுமுன் வரும்அன்று ஆன்றாந் தூக்கின் 180

## குற்றுகர ஈற்றுச் சிறப்புவிதி

வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி 181
இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை 182
நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறஒற் றிரட்டும் வேற்றுமை மிகவே 183
மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே 184
ஐஈற் றுடைக்குற் றுகரமு முளவே 185
திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற 186
தெங்குநீண்டு ஈற்றுயிர் மெய்கெடுங் காய்வரின் 187
எண்நிறை யளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்
முதலீ ரெண்முதல் நீளும் மூன்றாறு
ஏழ்குறு கும்ஆறு ஏழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழ னுயிரும்
ஏகும் ஏற்புழி யென்மனார் புலவர் 188
ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்ட னொற்றுயி ரேகஉவ் வருமே 189
மூன்றனுறுப்பு அழிவும் வந்தது மாகும் 190
நான்கன் மெய்யே லறவா கும்மே 191
ஐந்தனொற் றடைவதும் இனமுங் கேடும் 192
எட்ட னுடம்புணவ் வாகும் என்ப 193
ஒன்பா னொடுபத்து நூறும் ஒன்றின்
முன்னதி னேனைய முரணி ஒவ்வொடு
தகரம் நிறீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே 194
முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின்
இடையொற்று ஏக லாய்த மாகல்
எனஇரு விதியு மேற்கு மென்ப 195
ஒருபஃ தாதிமுன் னொன்றுமுத லொன்பான்
எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்
ஆய்தம் அழியஆண் டாகுந் தவ்வே 196
ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்நிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னும் இற்றும்
ஏற்ப தேற்கும் ஒன்பது மினைத்தே 197
இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட ஒற்று னவ்வாகு மென்ப 198

ஒன்ப தொழித்தஎண் ஒன்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட உயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகல்நெறி 199

### ஊகார ஈற்றுச் சிறப்புவிதி

பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும் 200

### ஏகார ஓகார ஈற்றுச் சிறப்புவிதி

இடைச்சொல் ஏஓ முன்வரி னியல்பே 201

### ஐகார ஈற்றுச் சிறப்புவிதி

வேற்றுமை யாயின் ஐகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே 202
பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோ யம்மும் திரள்வரி னுறழ்வும்
அட்டுறின் ஐகெட்டந் நீள்வுமாம் வேற்றுமை 203

## 4. மெய்யீற்றுப் புணரியல்

### மெய்யீற்றின்முன் உயிர்

உடல்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே 204
தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும் 205

### மெய்யீற்றின்முன் மெய்

தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந்
துன்னு மென்று துணிநரு முளரே 206
ஞணநம லவளன ஒற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினைநனி யவ்வன் மெய்வரின்
உவ்வுறும் ஏவ லுறுசில சில்வழி 207
நவ்விறு தொழிற்பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை 208

### ணகர னகர ஈறு

ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே 209
குறிலணைவு இல்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே 210
சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவுஎண் சாண்பிற
டவ்வா கலுமாம் அல்வழி யும்மே 211
னஃகான் கிளைப்பெய ரியல்பும் அஃகான்
அடைவு மாகும் வேற்றுமைப் பொருட்கே 212

மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே 213
தேன்மொழி மெய்வரி னியல்பும் மென்மை
மேவி னிறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமா மிருவழி 214
மரம்அல் எகின்மொழி யியல்பும் அகரம்
மருவ வலிமெலி மிகலு மாகும் 215
குயின்ஊன் வேற்றுமைக் கண்ணு மியல்பே 216
மின்பின் பன்கன் தொழிற்பெய ரனைய
கன்னவ் வேற்று மென்மையோ டுறழும் 217
தன்என் என்பவற் றீற்றுனவ் வன்மையோடு
உறழும் நின்னீ றியல்பா முறவே 218

மகர ஈறு

மவ்வீ றொற்றழிந்து உயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும் 219
வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள 220

நுந்தம்

எம் நம் மீறா மவ்வரு ஞநவே 221
அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும் 222

ஈமுங்

கம்மும் உருமுந் தொழிற்பெயர் மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே 223

யரழ ஈறு

யரழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல் 224
தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே
தாழுங் கோல்வந் துறுமே லற்றே 225
கீழின்முன் வன்மை விகற்பமு மாகும் 226

லகர ளகர ஈறு

லளவேற் றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவும் இடைவரி னியல்பும்
ஆகும் இருவழி யானு மென்ப 227
குறில்வழி லளத்தவ் வணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே 228
குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபும் ஆவன வுளபிற 229

லளஇறு தொழிற்பெய ரீரிடத்தும் உவ்வுறா
வலிவரி நல்வழி இயல்புமா வனவுள 230
வல்லே தொழிற்பெயர் அற்றுஇரு வழியும்
பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம் 231
நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழி யானும் றகர மாகும் 232
இல்லெ னின்மைச் சொற்குஐ அடைய
வன்மை விகற்பமும் ஆகா ரத்தொடு
வன்மை யாகலு மியல்பு மாகும் 233
புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும் 234

வகர ஈறு

சுட்டு வகரம்மூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும் 235
தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும் 236

### வருமொழித் தகர நகரத் திரிபு

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்கள் ஆயுங் காலே 237
வேற்றுமைப் பொருட்புணர்ச்சியை உருபு

### புணர்ச்சியோடு மாட்டெறிதல்

உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும் 238

### புணரியல்களுக்குப் புறனடை

இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே 239

# 5. உருபு புணரியல்

## 1. உருபுகள்

### எட்டுருபுகளும் சாரும் இடவகையால் இத்தனையாம் என்பது

ஒருவ னொருத்தி பலரொன்று பலஎன
வருபெய ரைந்தொடு பெயர்முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே 240

### வேற்றுமை உருபுகள் வருவதற்குக் காரணமும் வருமிடமும

பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே 241

### ஐம்முதலிய ஆறுருபும் நிலைமொழி வருமொழியோடு புணருமாறு

ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே 242

## 2. சாரியை

### சாரியை வருமாறு

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவுஞ் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமு மாகும் 243

### சாரியைகள் இவையென்பது

அன் ஆன் இன் அல் அற்றுஇற்று அத்துஅம்
தம் நம் நும் ஏ அ உ ஐ குன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே 244

### உருபு புணர்ச்சிக்குச் சிறப்புவிதி

எல்லாம் என்பது இழிதிணை யாயின்
அற்றோ டுருபின் மேலும் உறுமே
அன்றேல் நம்மிடை யடைந்தற் றாகும் 245
எல்லாரும் எல்லீரும் எனபவற் றும்மை
தள்ளி நிரலே தம் நும் சாரப்
புல்லும் உருபின் பின்ன ரும்மே 246
தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம்பிற
குவ்வின் அவ்வரும் நான்காறு இரட்டல 247
ஆமா கோனவ் வணையவும் பெறுமே 248
ஒன்று முதலெட் டீறா மெண்ணுர்
பத்தின்முன் ஆன்வரிற் பவ்வொற் றொழியமேல்
எல்லா மோடும் ஒன்பது மிற்றே 249
வவ்விறு சுட்டிற்கு அற்றுறல் வழியே 250
சுட்டின்முன் ஆய்த மன்வரிற் கெடுமே 251
அத்தின் அகரம் அகரமுனை யில்லை 252

## 3. புறனடை

### சாரியைக்குப் புறனடை

இதற்குஇது சாரியை யெனின்அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை
நின்ற எழுத்தும் பதமு மியற்கையும்
ஒன்ற வுணர்த்தல் உரவோர் நெறியே 253

நான்கு புணர்ச்சிக்கும் புறனடை

விகுதி பதஞ்சா ரியைஉ ருபு அனைத்தினும்
உரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே 254

வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன விறவு மாகும்ஐ உருபே 255
புள்ளியும் உயிரும் ஆயிறு சொல்முன்
தம்மி னாகிய தொழில்மொழி வரினே
வல்லினம் விகற்பமு மியல்பு மாகும் 256

எழுத்ததிகாரத்துக்குப் புறனடை

இதற்குஇது முடிபென் றெஞ்சா தியாவும்
விகுப்பள வின்மையின் விதித்தவற் றியலான்
வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே 257

*************

# 3 சொல்லதிகாரம்

## 1. பெயரியல்

கடவுள் வணக்கமும் அதிகாரமும்

முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழுது அறைகுவன் சொல்லே 258

### 1. சொல்லின் பொது இலக்கணம்

சொல் இன்னதென்பது

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா
இருதிணை ஐம்பாற் பொருளைந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே 259

மூவகை மொழி

ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையு மேற்பன 260

இருதிணை

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவும் அஃறிணை 261

### ஐம்பால்

ஆண்பெண் பலரென முப்பாற்று உயர்திணை 262
ஒன்றே பலஎன் றிருபாற்று அஃறிணை 263

### திணைபால்களுக்குப் புறனடை

பெண்மைவிட்டு ஆணவா வுவபேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை யன்னவு மாகும் 264

### மூன்றிடத்துஞ் சொற்றன்னையும் பொருளையும் உணர்த்துதல்

படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்
பெறப்படும் திணைபா லனைத்தும் ஏனை
இடத்துஅவற் றொருமைப் பன்மைப் பாலே 265

### மூவிடம்

தன்மை முன்னிலை படர்க்கைமூ இடனே 266

### வழக்கு இன்னதென்பது

இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல் 267

### செய்யுள் இன்னதென்பது

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள் 268

### குறிப்பும் வெளிப்படையும்

ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே
முதல்தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பில் தருமொழி யல்லன வெளிப்படை 269

## 2. சொற் பாகுபாடு

### சொல் இத்தனை வகைப்படுமென்பது

அதுவே
இயற்சொல் திரிசொ லியற்பிற் பெயர்வினை
எனஇரண் டாகும் இடைஉரி யடுத்து

நான்கு மாம்திசை வடசொலணு காவழி 270
இயற்சொல்

செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய இயற்சொல் 271

திரிசொல்

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும் 272

திசைச்சொல்

செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப 273

வடசொல்

பொதுஎழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல் 274

## 3. பெயர்ச்சொல்

### பொயரின் பொது இலக்கணம்

இடுகுறி காரணம் மரபொடு ஆக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபா லிடத்தொன்று
ஏற்பவும் பொதுவு மாவன பெயரே 275

### உயர்திணை ஆண்பாற் பெயர்

அவற்றுள்
கிளைஎண் குழூஉமுதற் பல்பொருள் திணைதேம்
ஊர்வான் அகம்புறம் முதல நிலன்யாண்டு
இருது மதிநா ளாதிக் காலம்
தோள்குழல் மார்புகண் காது முதலுறுப்பு
அளவுஅறிவு ஒப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதிப் பல்குணம்
ஓத லீத லாதிப் பல்வினை
இவையடை சுட்டு வினாப்பிற மற்றோடு
உற்ற னவ்வீறு நம்பி யாடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்

இன்னன ஆண்பெய ராகு மென்ப 276

## உயர்திணைப் பெண்பாற் பெயர்

கிளைமுத லாகக் கிளந்த பொருள்களுள்
ளவ்வொற் றிகரக் கேற்ற ஈற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே 277

## உயர்திணைப் பலர்பாற் பெயர்

கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும் 278

## அஃறிணை ஒன்றன்பாற் பெயர்

வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்
ஆதி யுறுதுச் சுட்டணை யாய்தம்
ஒன்றெனெண் ணின்னன ஒன்றன் பெயரே 279

## அஃறிணைப் பலவின்பாற் பெயர்

முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள இல்ல
பல்ல சில்ல உளஇல பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே 280

## அஃறிணை இருபாற் பொதுப்பெயர்

பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய 281

## இருதிணைப் பொதுப்பெயர்

முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்கும்முறை யிரண்டும்
தன்மை நான்கும் முன்னிலை யைந்தும்
எல்லாம் தாம்தா னின்னன பொதுப்பெயர் 282

## முதற்பெயர் முதலிய நான்கையும் வகுத்தல்

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆமந் நான்மைக ளாண்பெண் முறைப்பெயர் 283

## திணைப்பொதுப்பெயர் பாற்பொதுவாதல்

அவற்றுள்
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும் 284

### தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள்

தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது 285

### தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் இடம் வகுத்தல்

வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டு மாகும் 286

### பன்னிரண்டு பொதுப்பெயர்

தான்யான் நான்நீ ஒருமை பன்மைதாம்
யாம்நாம் எலாமெலீர் நீயிர்நீர் நீவிர் 287

### எண்ணால்வரும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை

ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில 288
ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப 289

### ஆகுபெயர்

பொருள்முத லாறோடு அளவைசொல் தானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே 290

## 4. வேற்றுமை

### வேற்றூம இனைய என்பதும் இத்துணைய என்பதும்

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை 291

### வேற்றுமையின் பெயரும் முறையும்

பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளியென் றாகும் அவற்றின் பெயர்முறை 292

### எழுவாயுருபு மற்றையுருபுகளை ஏற்றல்

ஆற னுருபும் ஏற்குமவ் வுருபே 293

### ஐ முதலிய உருபு ஏலாப் பெயர்கள்

நீயிர் நீவிர் நா னெழுவா யலபெறா 294

## பெயர் வேற்றுமை

அவற்றுள்
எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே 295

## இரண்டாம் வேற்றுமை

இரண்டா வதனுருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை யாதி யாகும் 296

## மூன்றாம் வேற்றுமை

மூன்றா வதனுருபு ஆலா னோடொடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன்பொருள் 297

## நான்காம் வேற்றுமை

நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவுஅது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே 298

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தா வதனுருபு இல்லும் இன்னும்
நீங்கலொப்பு எல்லை யேதுப் பொருளே 299

## ஆறாம் வேற்றுமை

ஆற னொருமைக் கதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புஉறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபி னாக்கம் ஆம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே 300

## ஏழாம் வேற்றுமை

ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருள்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப 301

## கண்முதலிய உருபுகள்

கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே 302

## எட்டாம் வேற்றுமை

எட்ட னுருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுத லியல்புஅயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே 303

## விளிக்கப்படு பெயர்கள்

இ உ ஊவோடு ஐ ஓ ன ள ர ல
யவ்வீற் றுயர்திணை யோரவல் லிவற்றொடு
ணஃகா னாவீ றாகும் பொதுப்பெயர்
ஞநஒழி யனைத்தீற் றஃறிணை விளிப்பன 304

## பொதுவாகிய விளியுருபு

இம்முப் பெயர்க்கண் ணியல்பும் ஏயும்
இகர நீட்சியும் உருபா மன்னே 305

## விளியுருபுக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

ஐயிறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபாம் அல்லவற் றாயு மாகும் 306
ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவுஅயல் நீட்சி யதனொடு
ஈறு போத லவற்றோடு ஓவுறல்
ஈறழிந்து ஓவுறல் இறுதியவ் வாதல்
அதனோடு அயல்திரிந்து ஏயுறல்ஈ றழிந்து
அயலே யாதலும் விளியுறு பாகும் 307
ளஃகா னுயர்பெயர்க் களபுஈ றழிவுஅயல்
நீட்சி யிறுதி யவ்வொற் றாதல்
அயலில் அகரம்ஏ யாதலும் விளித்தனு 308
ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ ஈ யாத லாண்டைஆ
ஈயாத லதனோடு ஏயுற லீற்றே
மிக்கயல் யாக்கெட் டதனயல் நீடல்
ஈற்றி னீருற லிவையுமீண் டுருபே 309
லகாரயீற் றுயர்பெயர்க்கு அளபயல் நீட்சியும்
யகார வீற்றிற் களபுமா முருபே 310
னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடுஅயல் நீட்சி 311
லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றயல் நீட்சியும் உருபா கும்மே 312

## விளியுருபுகளுக்குப் புறனடை

அண்மையி னியல்பும்ஈ றழிவும் சேய்மையின்
அளபும் புலம்பின் ஓவு மாகும் 313

### விளியுருபு ஏலாப் பெயர்கள்

நுவ்வொடு வினாச்சுட் டுற்ற ன ள ர
வைதுத் தாந்தா னின்னன விளியா 314

### முதல்சினைத் தொடர்பின்கண் அவ்விரண்டினும் இரண்டனுருபு வாராதெனல்

முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்குஐ யாகும் 315

### ஐயுருபு முதல் சினையிரண்டினும் வாராமைக்குக் காரணமும் மேலைச் சூத்திரப் பொருளோடு இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கும் ஏற்பித்தலும்

முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும் 316

### உருபு மயக்கம்

யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும் 317

### சில வேற்றுமையுருபு செய்யுளிடத்துத் திரிந்துவருதல்

ஐஆன்குச் செய்யுட்கு அவ்வு மாகும்
ஆகா அஃறிணைக்கு ஆனல் லாதன 318

### எட்டுவேற்றுமைக்கும் முடிக்குஞ்சொல்

எல்லை யின்னும் அதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளும் நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர் 319

# 2. வினையியல்

## 1 வினைச்சொல்

### தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்

செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே 320

### குறிப்பு வினைச்சொல்லின் பொது இலக்கணம்

பொருள்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே 321

### வினைச்சொற்களின் பகுப்பு

அவைதாம்
முற்றும் பெயர்வினை எச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும் 322

## 2. வினைமுற்று

### வினைமுற்று இனையவென்பது

பொதுஇயல்பு ஆறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரலது ஏற்பில முற்றே 323

### தெரிநிலைவினைமுற்றின் பாகுபாடு

ஒருவன்முத லைந்தையும் படர்க்கை யிடத்தும்
ஒருமைப் பன்மையைத் தன்மைமுன் னிலையினும்
முக்கா லத்தினு முரண முறையே
மூவைந் திருமூன் றாறாய் முற்று
வினைப்பத மொன்றே மூவொன் பானாம் 324

### ஆண்பாற் படர்க்கை வினைமுற்று

அன்ஆ னிறுமொழி ஆண்பாற் படர்க்கை 325

### பெண்பாற் படர்க்கை வினைமுற்று

அள்ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை 326

### பலர்பாற் படர்க்கை வினைமுற்று

அர்ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே 327

### ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்று

துறுடுக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பி னாகும் 328

### பலவின்பாற் படர்க்கை வினைமுற்று

அஆ ஈற்ற பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும் 329

### இருதிணைப் பொதுவினை

தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை 330

### தன்மை ஒருமை வினைமுற்று

குடுதுறு என்னுங் குன்றிய லுகரமோடு
அல்அன் என்ஏன் ஆகு மீற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை 331

### தன்மைப் பன்மை வினைமுற்று

அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓமிவை படர்க்கை யாரையும்
உம்ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை 332

### வினையுடனு முடியுந்தன்மை வினைமுற்றுக்கள்

செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளிம்பிய முற்றே 333

### உளப்பாட்டுப் பன்மை முன்னிலை

முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை 334

### முன்னிலை ஒருமை வினைமுற்று

ஐயா யிகர ஈற்று மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே 335
முன்னிலை முன்ன ரீயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே 336

### முன்னிலைப் பன்மை வினைமுற்று

இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல் 337

### வியங்கோள் வினைமுற்று

கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பா லெங்கு மென்ப 338

### வேறு இல்லை உண்டு

வேறில்லை யுண்டைம் பால்மூ விடத்தன 339

## 3. பெயரெச்சம்

### பெயரெச்சம் இனையவென்பது

செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே 340

### செய்யுமென் எச்சத்திற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

செய்யுமென் எச்சஈற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளுள் உம்உந்து ஆகலும் முற்றேல்
உயிரு முயிர்மெய்யும் ஏகலு முளவே 341

## 4. வினையெச்சம்

### வினயெச்சம் இனையவென்பது

தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே 342

### வினையெச்ச வாய்பாடுகள்

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும் 343

### வினையெச்சங்களுக்கு முடிபு வேறுபாடு

அவற்றுள்
முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற 344
வினைமுதல் கொள்ளுமென்றவற்றிற்கு

### ஒரு புறனடை

சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும் 345
சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை 346

## 5. ஒழிபு

### வினைக் குறிப்பு

ஆக்க வினைக்குறிப்பு ஆக்கமின்று இயலா 347

### செய்யுமென் முற்று

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே 348

### பாற் பொதுவினை

யாரென் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால் 349
எவனென் வினாவினைக் குறிப்புஇழி இருபால் 350

### இருவகை முற்றிற்கும் ஒரு புறனடை

வினைமுற் றேவினை யெச்ச மாகலும்
குறிப்புமுற்று ஈரெச்ச மாகலு முளவே 351

## 3. பொதுவியல்

1. இது முன்வந்த பெயருக்கும் வினைக்கும்
பின்வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைக் கூறுவது

### பாற்பொதுமை நீங்குநெறி

இருதிணை ஆண்பெணுள் ஒன்றினை ஒழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே 352

### பெயர் வினையிடத்து ஈற்றயல் திரிதல்

பெயர்வினை யிடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆஓ ஆகலுஞ் செய்யுளு ளுரித்தே 353

### உருபும் வினையீறும் எதிர்மறையினுந் திரியாமை

உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினுந்
திரியா தத்தமீற் றுருபி னென்ப 354

### உருபும் வினையும் அடுக்கிமுடிதல்

உருபுபல அடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும் 355

### இடைப் பிறவரல்

உருபு முற்றுஈ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன 356

### முடிக்குஞ் சொல் நிற்குமிடம்

எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும் 357
ஒருமொழி வேறொன்றை அமைத்தல்

ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே 358
திணைபாலிடப் பொதுமை நீங்கு நெறி

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே 359

### எச்சங்களின் முடிபு

பெயர்வினை உம்மைசொற் பிரிப்பென ஒழியிசை
எதிர்மறை இசையெனுஞ் சொல்லொழிபு ஒன்பதுங்
குறிப்புந் தத்தம் எச்சங் கொள்ளும் 360

## 2. தொகைநிலைத் தொடர்மொழி

### தொகைநிலைத் தொடர்மொழி இனையவென்பது

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றி னுருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலை தொடர்ச்சொல் 361

### தொகைநிலைத் தொடர்ப் பாகுபாடு

வேற்றுமை வினைப்பண்பு உவமை உம்மை
அன்மொழி யெனஅத் தொகையா றாகும் 362

### வேற்றுமைத் தொகை

இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே 363

### வினைத் தொகை

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை 364

### பண்புத் தொகை

பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை 365

### உவமத் தொகை

உவம உருபிலது உவமத் தொகையே 366

### உவம உருபுகள்

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே 367

### உம்மைத் தொகை

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையு ளும்மிலது அத்தொகை 368

### அன்மொழித் தொகை

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி 369

### தொகைநிலைத் தொடர் மொழிகளிற் பொருற்சிறக்கும் இடங்கள்

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள் 370

### இடத்தொகை பெயர்த்தொகைகட்கு வேறுபாடறிகுறி

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும் 371

### உம்மைத்தொகைக்கு புறநடை

உயர்திணை உம்மைத் தொகைபல ரீறே 372
தொகைநிலைத் தொடர் மொழிகள்

### பலபொருள் படுதல்

தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப 373

## 3. தொகாநிலைத் தொடர்மொழி

முற்றுஈ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை 374

## 4. வழாநிலை வழுவமைதி

### வழு விகற்பங்கள்

திணையே பாலிடம் பொழுது வினாஇறை
மரபா மேழு மயங்கினாம் வழுவே 375
திணையோடு வினாவிடையும் பாலோடு

### வினாவிடையும் வழுவாமற் காத்தல்

ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மே லன்மையும் விளம்புப 376

### திணை வழுவமைதி

உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின 377

திணைபால்மரபு வழுவமைதி

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே 378

திணைபால் வழுவமைதி

உவப்பினும் உயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பால்திணை யிழுக்கினு மியல்பே 379

பாலிட வழுவமைதி

ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே 380

இடம் வழுவாமற் காத்தல்

தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டும் எஞ்சிய ஏற்கும் 381

காலம்

இறப்புஎதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே 382

கால வழுவமைதி

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே 383
விரைவினு மிகவினுந் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி 384

அறுவகை வினா

அறிவுஅறி யாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார் 385

எண்வகை விடை

சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்றது உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையி னேர்ப 386

வினாவிடைகளின் முதல்சினை வழுவாமை

வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல் 387

மரபு

எப்பொரு ளெச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே 388

மரபு வழாநிலை

வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும் 389
வினைசார்பு இனமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே 390
எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளிவு எய்து மென்ப 391

மரபு வழாநிலையும் வழுவமைதியும்

ஒருபொருள் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி 392
திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு
இயற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே 393
படர்க்கை முப்பெயரோடு அணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி 394
அசைநிலை பொருள்நிலை யிசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும் 395

மரபு வழாநிலை

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந்து இசையா 396
ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையர் 397

மரபு வழுவமைதி

ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்வழா 398

மரபு வழுவாமற் காத்தல்

இனைத்தென் றறிபொரு ளுலகின்இலாப் பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும் 399

மரபு வழுவமைதி

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே 400

மரபு வழுவாமற் காத்தலும் மரபு வழுவமைதியும்

பொருள்முத லாறாம் அடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும் 401

மரபு வழுவாமற் காத்தல்

அடைமொழி யினமல் லதுந்தரும் ஆண்டுறின் 402

## மரபு வழுவாமற்காத்தலும் மரபு வழுவமைதியும்

அடைசினை முதல்முறை யடைதலு மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலும் மயங்கலுஞ் செய்யுட்கே 403

## மரபு வழுவமைதி

இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல் 404

## மரபு வழுவாமற் காத்தலும் வழுவமைதியும்

காரண முதலா ஆக்கம் பெற்றும்
காரண மின்றி ஆக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரணம் அடுத்தும்
இருமையும் இன்றியு மியலுஞ் செயும்பொருள் 405

## மரபு வழுவாமற் காத்தல்

தம்பா வில்லது இல்லெனி னினனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே 406
ஈ தா கொடுஎனும் மூன்றும் முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை 407

## மரபு வழுவமைதி

முன்னத்தி னுணருங் கிளவியு முளவே 408
கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே 409
உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே 410

# 5. பொருள் கோள்

## பொருள்கோளின் பெயருந் தொகையும்

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே 411

## யாற்றுநீர்ப் பொருள்கோள்

மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே 412

### மொழிமாற்றுப் பொருள்கோள்

ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே 413

### நிரனிறை பொருள்கோள்

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே 414

### பூட்டுவிற் பொருள் கோள்

எழுவா யிறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில் லாகும் 415

### தாப்பிசைப் பொருள்கோள்

இடைநிலை மொழியே ஏணையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை 416

### அளைமறிபாப்புப் பொருள்கோள்

செய்யு ளிறுதி மொழியிடை முதலிலும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே 417

### கொண்டுகூட்டுப் பொருள்கோள்

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே 418

### அடிமறிமாற்றுப் பொருள்கோள்

ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா அடியவும் அடிமறி 419

## 4. இடையியல்

### இடைச் சொல்லின் பொது இலக்கணம்

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல் 420

## இடைச்சொற் பொருட்கள்

தெரிநிலை தேற்றம் ஐயம்முற்று எண்சிறப்பு
எதிர்மறை யெச்சம் வினாவிழைவு ஒழியிசை
பிரிப்புக் கழிவுஆக்கம் இன்னன இடைப்பொருள் 421

## ஏகார இடைச்சொல்

பிரிநிலை வினாஎண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனஆ றேகா ரம்மே 422

## ஓகார இடைச்சொல்

ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவுஅசை நிலைபிரிப் பெனஎட் டோவே 423

## என என்று இடைச்சொற்கள்

வினைபெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்
எனஎனு மொழிவரும் என்றும் அற்றே 424

## உம்மை இடைச்சொல்

எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை எட்டே 425

## முற்றும்மைக்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி

முற்றும்மை ஒரோவழி எச்சமு மாகும் 426
எச்ச உம்மைக் காவதோர் விதி

செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை 427
சில எண்ணிடைச்சொற்களுக்

## காவதோர் இலக்கணம்

பெயர்ச்செவ் வெண்ஏ என்றா எனாஎண்
நான்குந் தொகைபெறும் உம்மையென் றெனவோடு
இந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும் 428

## சில எண்ணிடச்சொற்களுக்கு  எய்தியதன்மேற் சிறப்புவிதி

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும் 429

## பெயரொடு வரும்இடைச்சொற்கள்  வினையொடும் வருமாறு

வினையொடு வரினுமெண் ணினைய ஏற்பன 430

## தில்லிடைச்சொல்

விழைவே காலம் ஒழியிசை தில்லே 431

## மன்னிடைச்சொல்

மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கங்
கழிவு மிகுதி நிலையே றாகும் 432

## மற்றென்னும் இடைச்சொல்

வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே 433

## முன்னதற்கோர் புறனடை

மற்றைய தென்பது சுட்டிய தற்கினம் 434

## கொல்லிடைச்சொல்

கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே 435

## ஒடு தெய்ய

ஒடுவுந் தெய்யவும் இசைநிறை மொழியே 436

## அந்தில் ஆங்கு

அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே 437

## அம்ம இடைச்சொல்

அம்ம உரையசை கேண்மினென் றாகும் 438

## வியங்கோளசை

மாஎன் கிளவி வியங்கோ ளசைச்சொல் 439

## முன்னிலையசைச்சொல்

மியாஇக மோமதி அத்தை இத்தை
வாழிய மாளஈ யாழமுன் னிலையசை 440

## எல்லா இடத்தும் வரும் அசைச்சொல்

யாகா பிறபிறக்கு அரோபோ மாதுஇகும்
சின்குரை யோரும் போலு மிருந்துஇட்டு
அன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி 441

# 5. உரியியல்

## உரிச்சொல்லின் பொது இலக்கணம்

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல் 442

## பண்பிது என்பது

உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே 443

## உயிர்ப்பொருள்

மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஒரறி வாதியா வுயிரைந் தாகும் 444

## ஓரறிவுயிர்

புல்மரம் முதலஉற்று அறியுமோர் அறிவுயிர் 445

## ஈரறிவுயிர்

முரள்நந்து ஆதிநா அறிவொடீ ரறிவுயிர் 446

## மூவறிவுயிர்

சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர் 447

## நாலறிவுயிர்

தும்பிவெண் டாதிகண் ணறிவின்நா லறிவுயிர் 448

## ஐயறிவுயிர்

வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே 449

## உயிரில்லாத பொருள்

உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்தும் உயிரல் பொருளே 450

## முன்னதற்கு ஒரு புறனடை

ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே உடலுயிர் 451

## உயிர்ப்பொருள்களின் குணப்பண்பு

அறிவுஅரு ளாசை யச்சம் மானம்
நிறைபொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவுஅழுக் காறன்பு எளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய உடல்கொ ளுயிர்க்குணம் 452
உயிர்ப் பொருள்களின் தொழிற்பண்பு

துய்த்தல் துஞ்சல் தொழுத லணிதல்
உய்த்த லாதி உடலுயிர்த் தொழிற்குணம் 453

## உயிரல் பொருள்களின் குணப்பண்பு

பல்வகை வடிவுஇரு நாற்றம்ஐ வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம் 454

## இருபொருள்களுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைதல் நடுங்க லிசைத்தல்
ஈத லின்னன இருபொருட் டொழிற்குணம் 455

## ஒருகுணந் தழுவிய உரிச்சொல்

சால உறுதவ நனிகூர் கழிமிகல் 456

## பலகுணந் தழுவிய உரிச்சொல்

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் லரிப்பி னாகும் 457

## ஒருகுணந் தழுவிய உரிச்சொல்

மாற்றம் நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறல் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே 458
முழக்குஇரட் டொலிகலி இசைதுவை பிளிறிரை
இரக்கமுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கௌவை கம்பலை
அரவ மார்ப்போ டின்னன ஓசை 459

## இவ்வியலுக்குப் புறனடை

இன்ன தின்னுழி யின்னண மியலும்

என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலின் நயந்தனர் கொளலே 460

## இவ்வதிகாரத்துக்குப் புறனடை

சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவில ஆதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்தல் தெள்ளியோர் திறனே 461

## இந்நூலுக்குப் புறனடை

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே 462

# நன்னூல் முற்றும்